செ.வெ.எண்: 48/ஜனவரி நாள்: 29.01.2016

**இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டின் தகவல் தொகுப்பினை சரிசெய்தல் மற்றும் NPR தகவல் தொகுப்புடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி 18.01.2016 முதல் 05.02.2016 வரை நடைபெறுகிறது**
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டின் தகவல் தொகுப்பினை அந்நாள்வரை சரிசெய்தல் மற்றும் NPR தகவல் தொகுப்புடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி 1955-ம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் மற்றும் 2003 -ம் ஆண்டு குடியுரிமை விதிகளின்படி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 18.01.2016 முதல் 05.02.2016 வரை நடைபெற உள்ளது.

இப்பணிக்காக நியமிக்கப்பட்ட அரசு அதிகாரி (கணக்கெடுப்பாளர்) ஒவ்வொரு குடும்பத்திற்கும் வருகை புரிவார். அக்கணக்கெடுப்பாளர் அச்சிடப்பட்ட NPR புத்தகத்தைக் கொண்டு வருவார். அப்புத்தகத்தில் நபர்களுடைய பெயர், பாலினம், பிறந்த தேதி, தந்தையின் பெயர், தாயின் பெயர்,பிறந்த இடம், தற்போதைய முகவரி ஆகியவை இடம் பெற்றிருக்கும். மேலும் அந்நபர்களுக்கு ஏற்கெனவே ஆதார் எண் கொடுக்கப்பட்டிருந்தால் அத்தகவலும் அதில் அச்சிடப்பட்டிருக்கும் NPR -ல் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்குமான மேலே குறிப்பிட்ட விவரங்கள் அப்புத்தகத்தில் அடங்கியிருக்கும்.

வழக்குமாக வசித்துவரும் அனைத்து நபர்களும் கணக்கெடுப்பாளர் கொண்டுவரும் அச்சடிக்கப்பட்ட NPR புத்தகத்திலுள்ள விவரங்களை சரிபார்த்து சரியான தகவல்களை அவரிடம் கொடுத்து தங்களுடைய தகவல் தொகுப்பினை அந்நாள்வரை சரிசெய்து கொள்ளலாம். மேலும், அவருடைய கைபேசி எண், குடும்ப அட்டை எண் ஆகியவற்றையும் அவர்களிடம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வழக்கமாக வசித்து வரும் அனைத்து நபர்களும் கீழ்கண்ட விவரங்களை உறுதி செய்து

கொள்ளவும்.

- NPR புத்தகத்தில் அச்சடிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளனவா? ( NPR-ல் ஏற்கெனவே சேர்க்கப்பட்டிருந்தால்)
- .இறந்த நபர்கள் அனைவரும் NPR லிருந்து நீக்கப்பட்டுள்ளனரா?
- அனைத்து புதிய உறுப்பினர்களும் ( பிறந்த குழந்தை, மற்றும் குடும்பத்தில் புதிதாக வந்தவர்கள்) சேர்க்கப்பட்டுள்ளனரா?
- 

புதிதாகக் குடியேறிய குடும்பத்திலுள்ள அனைவரும் கணக்கெடுப்பாளரிடமுள்ள NPR படிவத்தில் அவர்களுடைய விவரங்களைக் கொடுத்து தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டில்தங்களை பதிவு செய்து கொள்ளவும்.

மேலும் கீழ்க்கண்ட விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன:

- ஆதார் எண்/ பதிவு எண்
- குடும்ப அட்டை எண்
- ஒவ்வொரு நபருடைய கைபேசி எண் (இருந்தால்)

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் பொதுமக்கள் தயாராக வைத்திருந்து தங்கள் வீட்டிற்கு வரும் அரசு அதிகாரியிடம் அவற்றை சரிபார்த்து பதிவு செய்ய ஒத்துழைக்கவும்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**